1996 ஆகஸ்டு 5]

அதேபோன்று பல்வேறு மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட விளையாட்டுத் திடல்களை அமைப்பதற்கான முயற்சிகள் நம்முடைய அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இப்படிப்பட்ட விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது அரசினுடைய குறிக்கோள். புதிய மாவட்டங்கள் உருவாகிற காரணத்தால், ஒவ்வொரு மாவட்டமும் உருவாகிறபோது, இந்தத் திட்டமும் சேர்த்து கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, மாண்புமிகு உறுப்பினர் செ. இராமலிங்கம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

74—

விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

*288—**திரு. செ. இராமலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் 1990-91 முதல் 1994-95 வரை எத்தனை விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் அதே கூட்டுறவுச் சங்கம் மூலம் கொடுக்கப்பட்ட குடிசை விளக்கு இணைப்புகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1990-91 முதல் 1994-95 வரை கும்பகோணம் கிராமிய கூட்டுறவு மின்சாரச் சங்கத்தின் மூலம் மொத்தம் 2360 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1990-91 முதல் 1994-95 வரை மொத்தம் 6588 குடிசை மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுந்தர்.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறுகள் இலவசமாக எல்லோருக்கும் வெட்டி வழங்கப்படுகின்றன. அந்தக் கிணறுகளில், ஆதி திராவிடர்களுடைய கிணறுகளுக்கு இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுகின்றன. அதேபோல் மற்ற சமுதாயத்தினருக்கு வழங்கப்படும் கிணறுகளுக்கும் மின் இணைப்பிலே முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி.டி. தண்டபாணி.

திரு. சி.டி. தண்டபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பம்ப்செட்டிற்கு மின் இணைப்பு பெறுவதில் காலதாமதம் ஆவதோடு மட்டுமல்லாமல், ஏதாவது சிபாரிசு அல்லது வேறு வகையான ஆதாயங்கள் என்று இருந்தால்தான் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதற்கு அரசு மட்டத்தில் ஏதாவது கொள்கை அளவிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? விண்ணப்பம் போட்ட இந்தக்காலத்திற்குள் மின் இணைப்புத் தரவேண்டும் என்கிற அளவுக்கு கொள்கை அளவிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படித் தரவில்லை என்றால், என்னதான் காரணம் என்று சொல்லி, விண்ணப்பதாரர்களுக்குக் கடிதம் எழுதுகின்ற அளவிற்கு மின்சார இலாக்கா ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா, அரசு இதற்கு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தை கேள்வி நேரத்தில் எழுப்பிவிட்ட காரணத்தாலே, அதற்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சிபாரிசு பேரிலே மின் இணைப்பு விவசாயிகளுடைய பம்ப்செட்டுகளுக்குக் கொடுக்கப்படுகிறது என்றும், வேறு சில ஆதாயங்களுக்காக கொடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இந்தியாவினுடைய பிரதமர் பரிந்துரை செய்தாலும் சரி, முதலமைச்சர் பரிந்துரை செய்தாலும் சரி, நானே பரிந்துரை செய்தாலும் சரி, இதிலே எந்த சிபாரிசுக்கும் இடமே இல்லை.

1996 ஆகஸ்டு 5]

சீனியாரிட்டி அடிப்படையில் யார் விண்ணப்பித்து, பதிவு செய்து இருக்கிறார்களோ, அந்த அடிப்படையில்தான் மின்சார இணைப்பு கொடுக்கவேண்டும் என்று திட்டவட்டமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் கடந்த ஆட்சியிலே ஒரேயொரு இடத்தில் மட்டும் சில விவசாயிகளுக்கு பணத்தைப் பெற்றுக் கொண்டு, தவறான முறையிலே மின்சாரம் கொடுத்தார்கள் என்ற தகவல் மின்சாரத் துறைக்குக் கிடைத்தவுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே, தவறு யார் செய்தாலும் சரி, மின்வாரியத் தலைவரே செய்தாலும் சரி அல்லது தலைமைப் பொறியாளரே செய்தாலும் சரி, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதை உணர்ந்துதான் மேல்மட்ட அதிகாரிகள் யாரும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்வதில்லை.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார இணைப்பைக் கொடுப்பதிலே ஜீவன்தாரா திட்டத்தின் மூலமாக நாம் கிணறுகளுக்கு, கிணறுகள் வெட்டுவதற்கு மானியமாகப் பணம் கொடுக்கிறோம். அதை மத்திய அரசு கொடுக்கின்றது. அப்படி மானியமாக மத்திய அரசு கொடுப்பதிலே ஆதிதிராவிட மக்களுக்கும் கொடுக்கின்றோம். இப்போது ஜாதி இந்துக்களுக்கும் கொடுக்கின்றோம். அதில் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் உடனடியாக நாம் மின்சார இணைப்பு கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஜாதி இந்துக்களுக்கு கொடுக்க மறுக்கப்படுகின்றது. எனவே இது நியாயமாகப்படவில்லை. ஆகவே அவர்களுக்கும் மின்சார இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வியில் இருக்கக் கூடிய நியாயத்தை அவர்களே உணரமுடியும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை கைதூக்கி விடவேண்டுமென்பதே அரசாங்கத்தினுடைய கொள்கை. எனவே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதே முன்னுரிமையை எல்லா மதத்தினருக்கும், எல்லா ஜாதியினருக்கும் கொடுக்க முடியாது. (குறுக்கீடு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஜீவன்தாரா திட்டத்திற்கு . . ..

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : எந்தத் திட்டமாக இருந்தாலும் அதிலே கொடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

திரு. மீ.அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின்சார இணைப்பு வழங்குவதிலே கடந்த கால ஆட்சி தரிசு நிலங்களில் இருப்பவர்களுக்கு வருவாய்த் துறை மூலமாக தடையில்லாச் சான்று கிடைத்தாலும் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவினை, போகிற போக்கில், ஏப்ரல் மாதம் அமல் செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் தடையாணையை ரத்து செய்யுமா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை கிராமப் பஞ்சாயத்திற்கு மட்டுமல்லாமல், பேரூராட்சிக்கும், மாநகராட்சிக்கும் விஸ்தரிப்பு செய்ய அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 75, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பத்மா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

75—

மின் தடை இல்லாமல் மின்சாரம் வழங்குதல்

*1041—**டாக்டர் பத்மா :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—